Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சப்த சங்கிரகம்



பதிப்பாசிரியர்

ச. பத்மநாபன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீர்வேலி
சிவசங்கரபண்டிதரின்

சப்த சங்கிரகம்

பதிப்பாசிரியர்
பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்
தலைவர் சம்ஸ்கிருதத்துறை,
கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம், சிலாபம்.
2017

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவசங்கரபண்டிதரின் சப்த சங்கிரகம் / பதிப்பாசிரியர் : ச.பத்மநாபன் / முதற்பதிப்பு : 1890 / மறுபதிப்பு : மார்ச் 2017 / வெளியீடு : ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம், முன்னேஸ்வரம், சிலாபம்/ பக்கம் : XX + 150 / தாள் : 70கி. / அச்சு : குரு பிறிண்டேர்ஸ் 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

ISBN : 978-955-43962-3-4

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

SABTA SANGRAHAM.

A compendeum of the Sanskrit Grammar.

BY

SIVA- SANKARA PANDIT

A Member of SAIVAPRAKASA SAMAJUM.

In two Vol-I.

EDITED BY HIS SON

SIVAPRAKASA PANDIT

Manager Saivappirakasa Paadasaalai. Neervaly.

சத்தசங்கிரகம்.

சம்ஸ்கிருத இலக்கணச் சுருக்கம்.

நீர்வேலிச்

சங்கரபண்டிதர்

செய்தது.

அவர்புத்திரர்

சிவப்பிரகாசபண்டிதரால்

வல்வைப்பாரதீநிலயமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

FIRST EDITION.

Valvai.

Jaffna.

1890.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முகவுரை

I

செம்மொழி இலக்கியம் எனும் உயர் அந்தஸ்தைப் பெற்ற மொழிகளான இரத்தீன், கிரேக்கம், இரேபியம், சம்ஸ்கிருதம், ஜெர்மனியம், பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் எனும் மொழிகளுள் பழமையானதும் தொடர்ச்சியானதுமான மொழிமரபைக் கொண்ட மொழி எனும் பெருமையுடைய மொழி சம்ஸ்கிருத மொழியாகும்.

இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலும் இந்தோஜர்மனிய மொழிக் குடும்பத்திலும் சம்ஸ்கிருத மொழியின் தொடர்புடைய தன்மையினை மொழியியலாளர்கள் பலர் ஆய்வு செய்துள்ளனர். இதனூடான ஒப்பியல் மொழியியலாய்வுகள் சம்ஸ்கிருத மொழியின் உயர்வினைத் தனக்கேயுரிய மரபில் பேணிநிற்கின்றமையை ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக் காட்டத்தவறவில்லை.

இந்திய மொழிமரபில் வட இந்திய மரபினையும் தென்னிந்திய மரபினையும் ஒன்றுபடுத்திய நெறிமுறையில் மொழிவழக்கின் அதிக செல்வாக்கைப் பெற்ற தன்மையில் வட இந்தியாவில் இந்தி, மராட்டி, குஜராத்தி, அஸ்ஸாமி, ஒரிஸா, காஷ்மீரி, பஞ்சாபி, வங்காளி ஆகிய மொழிகள் யாவற்றுடனும் தொடர்புடைய ஒரே மொழியான சம்ஸ்கிருத மொழி வடமொழி என அழைக்கப்படுகின்றது. தென்னிந்தியாவில் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு எனும் மொழிகள் யாவற்றுடனும் தொடர்புடைய ஒரே மொழியாகிய தமிழ்மொழி தென்மொழி என்று சிறப்பாக தமிழ்மொழியினையும் சுட்டுவனவாகின்றன.

II

சம்ஸ்கிருத மொழியின் புராதன வடிவமே வேத இலக்கியங் களாகின்றன. அதனடிப்படையில் சம்ஸ்கிருதமொழியின் புராதன மொழிவடிவம் வைதிகமொழியென்றும்; பாணினியெனும் சம்ஸ்கிருத இலக்க ஆசிரியரின் அஷ்டாத்யாயீ அல்லது பாணினீயம் எனும் இலக்கண நூலால் பிராகிருதம் எனும் பேச்சுவழிமொழி மரபிலிருந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செம்மைப்படுத்தப்பட்ட மொழிவடிவமே சம்ஸ்கிருத மொழியாகும். இத்தகைய சிறப்பின் மேன்மையினால் பாணினி சம்ஸ்கிருத மொழியின் தந்தையெனும் சிறப்புப் பெறுகின்றார். வைதிக மொழியென்பது வேத இலக்கியங்களுக்குரிய சிறப்பு வாய்ந்த அமைப்பான ஸ்வரங்களை அமைத்து உச்சரிக்கும் முறையாகும். உதாந்தம், அநுதாந்தம், ஸ்வரிதம் எனும் வகையில் ஸ்ருதி எனும் மரபில் ஒவ்வொரு வேதங்களுக்குரிய தனித்துவத்தை அவற்றை அத்யயனம் செய்யும் முறைகளுடன் இணைந்ததாகப் பேணிப்பாதுகாத்து வருகின்றது. ஒவ்வொரு வேதங்களும் தமக்கேயான வேதமொழிமரபை பிராதிசாக்யம் எனும் இலக்கண நூல் மரபினூடாக பாதுகாத்து வருகின்றன. வேதங்களை அத்யயனம் செய்பவர் பதம், கிரமம், ஜடை, கனம் என்ற முறைமைகளில் இடை செருகல்களும், மாறுதல்களும் மாற்றங்களும் ஏற்படாதவண்ணம் பாதுகாத்து வருவது தனித்துவமான வைதிகக் கல்வி மரபாகக் காணப்படுகின்றது. வேதங்கள் போற்றும் ஸ்வரங்கள் அமைந்த மொழி மரபிலிருந்து வளர்ச்சிபெற்று ஸ்வரவடிவங்களற்ற தன்மையினை யடைந்தமையினை உபநிடதங்களில் காணலாம்.

III

சம்ஸ்கிருதமொழியின் தோற்றுவாய் உலகின்படைப்புடன் தொடர்புடையதாகும். சிவனது நடராஜவடிவத்தில் படைத்தலைக் குறிக்கும் உடுக்கின் ஒலியிலிருந்து தோன்றியதாகவும் பதினான்கு தடவைகள் ஒலிக்கப்பட்ட உடுக்கின் ஒலியிலிருந்து வெளியிடப் பட்டவையே மாஹேஸ்வர சூத்திரங்கள் என்றும் அறியப்படுகின்றது. இச் சூத்திரங்கள் பதினான்கு ஆகும். இச்சூத்திரங்களின் உள்ளடக்கமாகவே சம்ஸ்கிருத மொழியின் இன்றியமையாத எழுத்துக்கள் யாவற்றையும் காணமுடிகின்றது. இச்சம்ஸ்கிருதமொழி சிவனுடன் தொடர்புடையதான தோற்றுவாயுடன் அமைந்து காணப்படுவதால் இம்மொழி தெய்வீகமொழி என்றும் சிறப்புப் பெறுகின்றது.

IV

சம்ஸ்கிருத மொழியின் மிகப்பழைய இலக்கணநூல் பாணினீயம் ஆகும். இது அஷ்டாத்யாயீ என்றும் அழைக்கப்படும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பகுதிகளையுடையதாக எட்டு அத்தியாயங்கள் உண்டு. சுமார் நான்காயிரம் சூத்திரங்களை உள்ளடக்கிய இந்நூல் கி.மு. 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. வடஇந்தியாவின் (இன்றைய பாகிஸ்தானின்) லாகூரில் சாலதூர எனும் இடத்தில் தாக்ஷீ என்பவனின் மகனாகப் பிறந்தவரே பாணினி ஆவார்.

பாணினியின் இலக்கண உருவாக்கத்திற்கு அக்கால சமுதாயத்தின் மொழிச்சூழல் முக்கிய காரணியாக விளங்குகின்றது. பொதுவாக இலக்கணம் என்பது "ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசவும் கற்கவும் பயன்படுவதே ஆகும்." எனக் கூறுவர். இந்நிலையில் பிராகிருதம் எனும் பேச்சுமொழி வழக்கிலிருந்து செம்மைப்படுத்தப்பட்ட மொழிவடிவமாகவே பாணினி விளங்குவதனைக் காணமுடிகின்றது. இந்நிலையில் சம்ஸ்கிருதம் என்பது சுத்தமான தூய்மையான மொழி என்றும்; பிராந்திய வழக்காற்றலும் அறிஞர்களது மொழி என்றும்; அதனது உயர்வுநிலைத் தன்மை கருதப்படுகின்றது.

சம்ஸ்கிருத மொழியின் இலக்கணம் எனும் தன்மையில் பாணினி எனும் இலக்கண நூல் விஞ்ஞான பூர்வமான விதிகளையுள்ளடக்கிய தன்மையில் மூன்று முனிவர்கள் முக்கியத்துவமடையவர்களாவர். அவர்கள் பாணினி காத்யாயனர், பதஞ்சலி ஆகியோரே. அம்முனிவர்கள் ஆவர். இவர்களுள் பாணினி சூத்திரகாரகர் என்றும்; வாச்யம் எனும் உரையெழுதியவர் வரருசி என்னும் பதஞ்சலி மஹாபாஷ்யம் எழுதியவர் என்றும் சிறப்புப் பெறுகின்றனர்.

V

பாணினீயின் அஷ்டாத்யாயிக்கு பலரும் உரையெழுதியுள்ளனர். இவை மிக நுட்பமான விளக்கங்களுடன் வளமான உரைகளாக வளர்ந்து வருகின்றமையைக் காணலாம். இந்நூல் வரிசைகளை நோக்குவோம்.

1. பர்த்ருஹரி - கி. பி.7   1. வாக்கியபதியா
2. பிராசிர்ணகா
3. பாணினியின் அஷ்டாத்யாயி உரை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. ஜெயதித்யா, வாமன (இருவர்) காசிகா விருத்தி (கி.பி. 7)
3. ஜினேந்திரபுத்தி காசிகவிவரண பஞ்சிகா (கி. பி. 8)
4. ஹரதத்த (கி. பி. 12) காசிகாவிற்கு - பதமஞ்ஜரி
5. இராமச்சந்திரா (கி.பி.15) ப்ரக்கிரியா கௌமுதீ
6. பட்டோஜி (கி. பி 18) சித்தாந்த கௌமுதீ
7. வரதராஜா (கி.பி.18) லகுசித்தாந்த கௌமுதீ
8. நாகேசபட்டர் (கி.பி. 18) உத்போதா

என்பவை முக்கியத்துவமுடையவையாகும். பாணினீயம் எனும் கி.மு 4ஆம் நூற்றாண்டில் தோன்றிய சம்ஸ்கிருத இலக்கணநூல் கி.பி 20ஆம் நூற்றாண்டு வரையாக மொழிக்கட்டமைப்பில் மிகுந்த கட்டுக்கோப்புடன் விளங்கியதோடு மிகுந்த செல்வாக்குப்பெற்றதோர் பேரிலக்கண நூலாக இந்நியாவில் விளங்கியுள்ளது. இத்துடன் கி.பி 16ஆம் நூற்றாண்டு முதல் சிறப்பாக ஐரோப்பிய அறிஞர்கள் மத்தியிலும் பெருமதிப்பைப் பெற்ற நூலாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

இந்தியமரபினுள் கி.பி 1505களில் போர்த்துக்கேயரது வருகையுடன் இந்தியப்பண்பாட்டின் தனித்துவம் மிக்க அடையாளங் களை மேற்குநாட்டவர்கள் வியப்புடன் நோக்கினர். அவ்வகையில் வேத இலக்கியம் முதல் மரபுகள், இலக்கியங்களின் அனைத்துமே உயர்வு நிலையில் நோக்கப்பட்டன. ஆய்வு முறையில் நோக்கப்பட்ட அச்சிந்தனைகள் தமது மரபுடன் ஒப்புநோக்கிய தன்மைகள் ஒப்பியல் ஆய்வுகளாகவே வெளிவரவும் தலைப்பட்டன. அந்நிலையில் சிறப்புத்தன்மையுடன் நோக்கப்பட்ட மொழிமரமே இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம் ஆகும். இம்மொழிக் குடும்பத்தில் ஒப்பியல் இலக்கணம் எனும் மரபும் சிறப்பாக சம்ஸ்கிருத மொழிக்கான இலக்கண நூல்களில் பலவும் தோன்றுவதற்குரிய புதிய அணுகுமுறைகளைத் தோற்றுவித்தன.

VI

சம்ஸ்கிருத இலக்கணம் எனும் மரபு முதன்முதலில் கி.பி 1668ல் ஹென்ரிச் ரொத் எனும் ஜெர்மனியரால் எழுதப்பட்டது. இந்நூல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெளியிடப்படாத நூல் என்றும் கூறுவர். இதனையடுத்து இந்நூல் கி. பி. 1790ல் இலத்தீன் மொழியில் வெளியிடப்பட்டது. இதனைத்தொடர்ந்து கோல்புறூக் (1805), கரே (1806), வில்கின்ஸ் (1808), பொப்பென்பே ஆகியோரால் ஒப்பியல் இலக்கணம் எனும் முறைமையில் இலக்கணம் எழுதப்பட்டது. விட்னி (1879) வெக்கர் நெகல் ஆகியோர் சம்ஸ்கிருத இலக்கணம் என்றே தனியாக நூல்களை எழுதினர். மொனிய வில்லியம்ஸ், மக்ஸ் மூலர் (1870), மக்டொனல் (1901) என்றவராக எழுந்த இலக்கண நூல்கள் பாணினியில் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் மாணவர்களுக்காகவும் சிறப்பாக வாசகர்களுக் காகவும் ஒன்றுதொடுக்கப்பட்ட தன்மையில் எழுந்த நூல்களாகின. அம்மரபில் நோக்குகையில் தேவநாகரி எனும் சம்ஸ்கிருத எழுத்தின் வரிவடிவத்தை ஆங்கில மொழிமூலமான நூல்களாக அவை விளங்குவது சுட்டிக்காட்டத்தக்கது.

சம்ஸ்கிருத மொழிக்குரிய முக்கியத்துவம் ஒலி வடிவமேயாகும். எழுத்துக்கள் எவ்வாறுதோற்றம் பெறுகின்றன என்பதிலேயே சம்ஸ்கிருத இலக்கண நூல்கள் முக்கியத்துவமளிக்கின்றன. அதனடிப்படையில் எழுத்துக்களின் பிறப்பு முக்கியத்துவமுடையதாகவும், ஒலியியல் மாற்றங்களையுள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

சம்ஸ்கிருத மொழி ஒலிக்குரிய முக்கியத்துவத்தைத் தனக்குரியதாகக் கொண்டு விளங்கும் காரணத்தால் அது தனக்குரிய ஒரு வரிவடிவத்தையும் கொண்டு விளங்கவில்லை.

சம்ஸ்கிருத எழுத்துக்கள் ஒலி வடிவத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்குரிய அடையாளங்களாகவே ஆகின்றன. அந்நிலையில் வசிஷ்ட தர்மசூத்திரம் முதன்முதலில் சம்ஸ்கிருத எழுத்துக்கள் பற்றிய தெளிவான குறிப்பை முன்வைக்கின்றன. பீலர் என்பவர் இந்நூல் கி.பி 8ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருத்துடையவராக இருந்தாலும் சிலர் இந்நூல் கி.மு. 4ம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பார். அஷ்டாத்யாயீயில் லிபிகார எனும் சொல் எழுத்தையே குறிக்கின்றது. இதனடிப்படையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நோக்குகையில் லிபி, அக்ஷர, கிரந்த, லேகன, லேகக, அக்ஷரிகா, காண்ட, படல போன்ற சொல்மரபுகள் எழுத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சொற்களாக விளங்குகின்றமையை நோக்கமுடிகின்றது. எனினும், பிராமி, கரோஷ்டி எனும் எழுத்துவரிவடிவங்களின் படிநிலை வளர்ச்சிகளை எழுத்தியல் பற்றிய ஆய்வுகள் மற்றும் சாசனவியல் சார்ந்த ஆதாரங்களுடன் நிறுவ முற்படுவது குறிப்பிடத்தக்கது.

சம்ஸ்கிருத மொழியைப் பொறுத்தவரை தேவநாகரிக வரிவடிவம் உயர்நிலைக் கற்கைகளுக்கானதும், சாஸ்திர ரீதியானதும், உயர்ந்த தன்மையுடையதுமான தன்மையில் சிறப்பாக தென்னாசிய பிராந்தியம் முழுவதுக்குமானதோர் பயன்பாட்டில் இன்று உலகலாவிய ரீதியில் கூட முக்கியத்துவம் பெறும் வரிவடிவமாகக் கொள்ளப்படுகின்றது. அதேவேளை கிரந்தம் எனும் சுருங்கிய வடிவமுடைய பல்லவ கிரந்தாக்ஷரம் தென்னிந்தியாவில் பல்லவ மன்னர்களால் சம்ஸ்கிருத மொழியை தமிழர்கள் பயன்படுத்துவதற்கென்றே சிறப்பாக உருவாக்கப்பட்ட வரிவடிவம் "பல்லவ கிரந்தம்" ஆகும். இவ்வரிவடிவம் பெரும்பாலும் தமிழ்மொழி வடிவத்தையும் சிறப்பு வரிவடிவங்களையும் உள்ளடக்கியமை சுட்டிக் காட்டத்தக்கது.

பல்லவ கிரந்த வரிவடிவத்திலேயே சிறப்பாக தென்னிந்திய சம்ஸ்கிருத இலக்கியமரபு வளம் பெற்றது. வட இந்தியமரபில் வளம்பெற்ற சம்ஸ்கிருத இலக்கண இலக்கிய மரபுகளில் காவ்ய சாஸ்திர இலக்கண இலக்கிய மரபுகளில் காவ்ய சாஸ்திரமரபுகள் கூட தென்னிந்தியாவின் பதிப்பு முறைகளில் கிரந்தாக்ஷரவடிவிலேயே வெளிவந்தன. அந்நிலையில் சிறப்பாக சிவாகமமரபும், சிவாகமக்கிரியைகளின் பத்ததி மரபுகளும் கிரந்தவரிவடிவத்திலேயே வளர்ச்சிபெற்றன. இதனடிப்படையில் சிவாகம மரபிற்காகவே தோற்றம் பெற்ற சிறப்பு வரிவடிவமே கிரந்தாக்ஷரம் எனக் கருதுவாரும் உள்ளனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

VII

சம்ஸ்கிருத இலக்கணமரபில் இலங்கையில் தோற்றம் பெற்ற இலக்கண நூலே சப்த சங்கிரகம் எனும் தமிழ்மொழிமூலம் சம்ஸ்கிருத மொழியைப் பயிலுவதற்காக பயிற்சிகளுடன் சேர்த்து கிரந்தலிபியில் தமிழ் விளக்கத்துடன் எழுதப்பட்ட இரண்டு தொகுதிகளையுடைய நூல்களுள் முதலாம் தொகுதிநூலாகும். இந்நூல் நீர்வேலி சிவ சங்கரபண்டிதரால் எழுதப்பட்டதாகும். சம்ஸ்கிருத இலக்கணச் சுருக்கம் (A compendeum of the Sanscript Grammar) எனச் சுட்டப்பட்டு 1890ல் வல்வையில் சிவப்பிரகாச பண்டிதரால் இற்றைக்கு 127 வருடங்களுக்கு முன்னர் பதிப்பிக்கப்பட்டதாகும்.

சங்கரபண்டிதர் இறந்து இருபதாண்டுகளின் பின்னர் வெளிவந்த இந்நூல் கீரிமலை சிவன்கோவிலைச் சார்ந்த கா.சபாதிக்குருக்கள் அவர்களது முகவுரையுடனும் தென்னிந்தியாவின் திருவனந்தபுரத்து ஓய்வுபெற்ற பிரதமநீதியரசர் திருவாளர் T.செல்லையாபிள்ளை அவர்களது அவதானக் குறிப்புடனும் (Opinion) வெளிவந்துள்ளது. அத்துடன் நூலாசிரியரது மாணவர்கள் மரபினர் பலர் உதவிய பொருளுபகாரத்தைக் கொண்டே இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது என்பதனையும் தெளிவுபடுத்துகின்றது. வல்வெட்டித்துறையில் பாரதீநிலைய முத்ராக்ஷரசாலை எனும் அச்சியந்திரசாலையில் சம்ஸ்கிருத கிரந்த எழுத்துக்கள் அச்சிடத்தக்க நிலையிற் காணப்பட்ட மையும் முக்கியத்துவமுடைய குறிப்புக்களாகும். அத்தடன் தற்போது முன்னேஸ்வரம் தேவஸ்தான வெளியீடாக வெளிவரும் இந்நூல் முன்னர் வெளிவருவதற்கு பொருளுதவி செய்த நா.குமாரசுவாமிக்குருக்கள் இவ்வாலயத்தின் பிரதானகுருவாகவும் தர்மகர்த்தாவாகவும் இருந்து அரிய இந்நூல் வெளிக்கொணரப்படவேண்டிய நிலையில் பொருளுதவி செய்திருந்தமை இதற்கான தொடர்பினை வலியுறுத்துவதாக அமைகின்றது.

VIII

"சப்தசங்கிரகம்" எனும் இந்நூல் சம்ஸ்கிருத மொழியைத் தாமாகவே தமிழ்மொழி மூலமாகக் கற்பதற்குரிய மாணவர் கையேடாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழுதப்பட்ட நூலாகும். 146 பக்கங்களையுடைய இந்நூல் சம்ஸ்கிருத இலக்கணச் சுருக்கம் என்னும் பொருளையுடையதாகும். 1. குறியீடு (சம்ஞா) பக்கம் 1-6, 2. சந்தி நிரூபணம், பக்கம் 7-30 (பரீட்சைக்கு யோகாமான வினாக்கள் இணைக்கப்பட்டுள்ளன:) 3. சப்தங்கள், பக்கம் 31-110, 4. காரகாதி நிரூபணம் பக்கம் 111 - 118, 5. சமாச நிரூபணம், பக்கம் 119 - 131, 6. தத்திதாக்கள், பக்கம் 132 - 146 வரையாக அமைந்திருக்க இறுதியாக இருபக்கங்களில் பிழைதிருத்தம் இடம்பெற்றிருக்கிறது. பதிப்பாசிரியரின் பகுப்புக் குறிப்பின் படி நோக்குகையில் பொருளடக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது.

சம்ஞா (குறியீடு)

முதலாவது	சந்திநிரூபணம்
இரண்டாவது	சுபந்த சப்தநிரூபணம்
மூன்றாவது	காரக நிரூபணம்
நான்காவது	சமாச நிரூபணம்
ஐந்தாவது	தத்திதநிரூபணம்

என்பதாகும். சுபந்த சப்த நிரூபணம் எனும் பகுதி மிகப்பெரிய உள்ளடக்கத்தினைக் கொண்டுள்ளமையால் இதனை பிரதான நோக்கமாகக் கொண்டே சப்த சங்கிரகம் எனப் பெயரிட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் வளம்பெற வேண்டும் எனும் சிந்தனையில் தமிழ்மொழியையும் சம்ஸ்கிருமொழியையும் வளமுடையதாக்கி தமக்கென ஓர் தனிமுத்திரை பதித்த புலமையாளர் நீர்வேலி சிவ.சங்கரபண்டிதர் ஆவார். இவர் சிவாகமமரபிலும், சம்ஸ்கிருத இலக்கண இலக்கிய மரபிலும் துறைபோந்தவர். சம்ஸ்கிருதத்தில் உரையாடும் திறனுடையவர். சம்ஸ்கிருதத்தில் மூலநூல்களையும் உரை நூல்களையும் தமிழ் மொழியறிந்தவர்களும், சைவசாஸ்திரங்களில் ஆர்வமுடையவர்களும் அறிந்து பயன்பெறும் வகையில் தமிழில் மொழிபெயர்த்தும் உரையெழுதியும் வெளிப்படுத்தியவராவார். மூலநூற்பரிசோதகராக, உரையாசிரியராக, மொழிபெயர்ப்பாசிரியராக, புலமையாளராக, கண்டனகாரராகப் பல்வேறு பரிணாமங்களில் மிளிர்ந்த சிறப்பு தனித்துவமானதாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சங்கரபண்டிதரது "சப்தசங்கிரகம்" எனும் நூல்வெளிவரும் அதேவேளை "தாதுமாலை" எனும் நூலும் வெளிவருகின்றது. இந்நூல்களை வெளிக்கொணருவதற்கு பெரிதும் உதவியவர் எனது அன்புக்குரிய நண்பரும் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் செயலாளரும், தமிழ் இலக்கிய ஆர்வலரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்துநாகரிகத் துறையின் துணை விரிவுரையாளருமாகிய திருவாளர் தி.செல்வமனோகரன் அவர்களாவார். பண்டைய மரபுகளும் ஆக்கங்களும் அழியாது பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும் பழைய நூல்கள் சிதைவுறாது மீண்டும் வெளிவர வேண்டும் என்பதிலும் எமது எண்ணத்தையொத்த மனமுடைய திருவாளர் தி.செல்வமனோகரனுக்கு எனது நன்றிகள். மேலும், இந்நூல் உருவாகுவதற்கு கடுமையாக உழைத்த குருபிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும் மற்றும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும் பணிவன்புடன் கூடிய நன்றிகள் உரித்தாகுக.

நல்லவர்களது சிந்தனைகள், எண்ணங்கள், ஆக்கங்கள் என்றும் அழிவதில்லை எனும் உயர்சிந்தனைகளுக்கு உரைகல்லாக சுமார் 127 வருடங்களின் பின்னர் வெளிவரும் இந்நூலை அன்பர்கள், ஆர்வலர்கள், சைவத்தமிழபிமானிகள் யாவரும் படித்துப் பயனடைவார்களாகுக. தற்போது வெளிவரும் இந்நூலில் காணப்படுகின்ற உயர்ந்த சிந்தனைகளுடன் கூடிய உள்ளடக்கம் மாணவர்களுக்கான பயிற்சி களுடன் கூடியதான பதிப்பாக ஒழுங்கமைத்துப் பதிப்பிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன. அத்தகைய பணி தொடரும் எனத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ச.பத்மநாபன்
தலைவர்,
சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

பிரதம குருவும் தர்மகர்த்தாவும்
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம்,
சிலாபம்.
08.03.2017.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

☞ நெடுநாட்களின் முன்னரே நீர்வேலி கோ. நீலகண்டக் குருக்கள் அவர்கள் கைவிசேஷமாக ஐந்து ரூபா உபகரித்துப் பிரேரிக்க, நான் இந்நூலை அச்சிட முயன்றேனாயினும், கையொப்பங்கள் காலத்திற் சேராமையாலும், இவ்யாழ்ப்பாணத்தில் ஒன்றேயாய் மிகச்சிறிதாகிய வல்வையிற் சம்ஸ்கிருத யந்திரசாலையிலே சிறிது சிறிதாயன்றி வேலைசெய்தல் கூடாமையானும் காலத்திலே முடித்தல் இயலாதாயிற்று. இப்பொழுதும், இதின் பிற்பாகமாகிய உத்தரார்த்தம் முடியும்வரை காத்திராமற் படிப்பவர்கட்கு உபயோகமாகும் பொருட்டுப் பூர்வார்த்தம் என்னும் முற்பாகத்தைக் கட்டுவித்து முன் வெளிப்படுத்துகின்றேன்.

இதின் கையொப்பத்தொகையை ஒரேமுறையில் உபகரியாது ஒருபகுதியைமாத்திரம் உபகரித்தவர்களும், முழுதையும் இன்னும் உபகரியாதிருப்பவர்களும், கையொப்பமுமின்றி வாக்குமாத்திரம் பண்ணினவர்களும் ஆகிய புண்ணியவான்கள் தாம் பிரதிஞ்ஞை பண்ணின அன்றே அத்தொகை தருமத்திரவியமாய்விடுதலின், அதனை வைத்திருந்தல் பழியும் பாவமுமாய் முடிதலை உய்த்துணர்ந்து, இனியாவது மனம்வைத்து உபகரித்துவிடுவார்களாயின் உத்தரார்த்தத்தையும் இயன்றளவு விரைவில் வெளிப்படுத்தல் கூடும்.

ச. சிவப்பிரகாசன்.

☞ இதுகற்கும் அதிகாரமுடைய விவேகிகள், குறிக்குங் காலவெல்லையுட் பரீட்சாசித்தி காட்ட உடன்பட்டு நியமஞ் செய்வாராயின், அவர்க்கு ஒவ்வொரு புத்தகம் உபகரிக்கப்படும். ச. சி.

———o———

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

OPINION.

From

T. Chellappa Pillai Esquire, B. A. B. L.
Retired Chief Justice of Travancore.

I have glanced over the Sabda Sangraha written by the late Mr. Sankara Pandit, and edited by his son Sivaprakasa Pandit; so far as my limited knowledge of Sanskrit enables me to form an opinion, I think it is a useful compilation, calculated to facilitate students in the prosecution of their Sanskrit studies. It is divided into five parts; (1) Sandhi corresponding to புணர்ச்சி in the Tamil grammar, but which has no equivalent in the English grammar; (2) Subanta Sabad or Nouns; (3) Kâraka, or Syntax; (4) Sâmasa, or Compound words; and (5) Taddhita or Derivatives. Tigantam or verbs, which is one of the most difficult portions of Sanskrit grammar, in consequence of the numerous Conjugations and irregular forms, is said to be hereafter published as the 6th part. Properly speaking the treatment of verbs ought to precede that of Karaka. Being a good Tamil as well as Sanskrit Scholar, Mr. Sankara Pandit has given a correct rendering into Tamil of all the Saskrit rules. This is a great advantage to Tamil students. It is gratifying to find Mr. Siva pirakasa Pandit treading in the footsteps of his father who was the author of the useful manual of SAIVAISM called SAIVAPRAKASANAM.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Names of those making donations in aid of my undertaking.

இந்நூல் அச்சிடுதற்குப் பொருள் உபகரித்த புண்ணியவான்கள்.

	ஊர்.	பெயர்.	உத்தியோகம்.	ரூ.	சதம்.
1	மாவிட்டபுரம்.	சு. சாமிக்குருக்கள்.	கந்தசுவாமிகோயிற் றருமகர்த்தர்.	10	00
2	இிமலை.	கா. தியாகராசக்குருக்கள்.	சிவன்கோயிற் றருமகர்த்தர்	10	00
3	நவிண்டில்.	இ. சதாசிவக்குருக்கள்.	சிஷ்ய பரிபாலனம்.	5	00
4	அச்சுவேலி.	க. சப்பாபதிக்குருக்கள்.	,,	5	00
5	கொழும்பு.	நா. குமாரசாமிக்குருக்கள்.	,,	5	00
6	நல்லூர்.	ச. இரகுநாதக்குருக்கள்.	,, சோதிஷம்.	5	00
7	மாதகல்.	சு. விரம்பையர்.	உபாத்தியாயர்.	3	00
8	பளை.	ச. செல்லையர்.	பிள்ளையார் கோயிலதிகாரம்.	3	00
	......	....	....	.....	....
9	கந்தரோடை.	W. Mudliar Comara Wellu Pilly	Landed propts.	25	00
10		W. Mudliar Mutto Wello Pilly	,,	25	00
11	மட்டக்களப்பு.	கோ. கந்தசாமிபிள்ளை.	வர்த்தகம்.	25	00

ஸ்ரீமத் - பண்டித சிரோமணியும் சிவபூசாதிலகருமாகிய எமது நண்பர் அவர்கள் விருப்பத்தின்படிக்கு வித்தியாபி விருத்திக்காகச் சிவப்பிரீதி செய்யப்பட்டன.

கோ. க

	Place.	Names.	Occupation.	Rs	C
12	Kaits	C.W.CatheravaluPillai	Police Magistrate	15.	00
13	Vannarponnai	T.Chellappapillai	Retired Judge	10.	50.
14	Jaffna pattam	Ch.Nagalingam	Advocate	10.	50.
15	Tellipalai	A.Canagasabai	Advocate	10.	00.
16	Jaffna pattam	V.Casippillai	Proctor	10.	00.
17	Batticotta	A.Eragunatha Mha Mdr	Maniagar	10.	00.
18	புத்தூர்	ஆ. பூதத்தம்பிபிள்ளை.	கமம்.	10.	00.
19	,,	மா. அருணாசலம்பிள்ளை.	உதவி மணியம்.	10.	00.
20	Kopai	Kumarasuriar	Landed Propts	5.	00.
21	Vannarponnai	T Sankarapillai.	Supreme Court Proctor	5.	00.
22	Nellore	Mylvaganam	Store Keeper	5.	00.
23	புத்தூர்	மு. அருணாசலம்பிள்ளை	கமம்	5.	00.
24	,,	Muttusamy Mudliar	Landed Propts.	5.	00.
25	அளவெட்டி	அ. சின்னத்தம்பர்	கமம்	5.	00.
26	புலோலி	வ. குமாரசுவாமிப்பிள்ளை	உபாத்தியாயர்	5.	00.
27	Moolai	C.Valupillai	Overseer	5.	00.
28	சுன்னாகம்	சோ.ஆறுமுகச்செட்டியார் [யார்	வாணிகம்	5.	00.
29	தேவகோட்டை	சு.பழ.அரு. பழனிஅப்பச்செட்டி	,,	5.	00.
30	வண்ணார்பண்ணை		வைத்தியசிரோமணி	5.	00.
31	Pioly	V.Chinniahpillai [ர்	Doctor	3.	00.
32	புலோலி	அ.வேன்மயில்வாகனச் செட்டியா	உபாத்தியாயர்	3.	00.
33	Tellipalai	S. Kanagaratnam	Clerck	3.	00.
34	சுதுமலை	க. சபாபதிப்பிள்ளை	கொத்தாரிசு	3.	00.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கையொப்பத்தின் ஒருபகுதியைமாத்திரம் உபகரித்தவர்கள்.

	ஊர்.	பெயர்.	உத்தியோகம்.
1	கோப்பாய்	ப.வேதக்குட்டிக்குருக்கள்.	
2	மல்லாகம்	T·Kathiritamby	Maniagar
3	Colombuturai	T.Coomaraswamy Chettiar	Planter
4	மானிப்பாய்	இ.சின்னத்தம்பிமுதலியார்	கமம்

கையொப்பம் மாத்திரம் உபகரித்தவர்கள்.

	ஊர்.	பெயர்.	உத்தியோகம்.
1	கோப்பாய்	ப.பைரவக்குருக்கள்	
2	Mallagam	R·Mailvaganam	Proctor
3	Vannarponnai	V·Canagasapai	Doctor
4	Manepai	S.Navaratnasingam	
5	Oodupity	V Modr. Sivasitham param	Maniagar
6	Moolai	M .Chinnappoo	Contractor
7	,,	S. Katheravaloopp illai	Notary
8	Tavady	A·vettivaluppillai	P Modaliar
9	Vannarponnai	V·Pouniah	Overseer

வாக்கினால் மாத்திரம் உபகரித்தவர்கள்

இருப்பிட்டி ம. பூதத்தம்பிபிள்ளை.
,, த. கார்த்திகேசபிள்ளை.
,, இ. மழவராசபிள்ளை.

மங்கல வாழ்த்து.

வெண்பா.

கல்வியின்மே லென்மேலுங் காணுமபி மானத்தால், வல்லபடி செம்பொன் மகிழ்ந்துதவு—செல்வகன
வான்கள் புண்ய வான்களுக்கு வந்தனமான் முந்துசிறி, மாக்களிவர் வாழிசுப மன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முகவுரை.

சம்ஸ்கிருத பாஷையிலே சுருங்கியனவும் விரிந்தனவுமாகிய பற்பல வியாகரணங்கள் உள்ளனவாயினும், அவை இயன்றளவு சம்ஸ்கிருத வியுற்பத்தி உடையவர்களுக்கன்றி மற்றையவர்கட்கு எளிதின் உபயோகமாகா. வியுற்பத்தியான்களும் உபாத்தியாயர் உதவிகொண்டன்றித் தாமே அவற்றைத் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல் மிகுந்த அருமை.

தென்னிந்தியாவிலுள்ள சில சாஸ்திரிகள், சிறுவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டு, வியாகரணங்களிற் சத்தம் சமாசம் முதலிய சில பாகங்களை மிகச்சுருக்கித் தமிழால் விளக்கிச் சிறுபுத்தகங்களாக்கி வெளிப்படுத்தியிருக்கிறார்கள். செந்தமிழ்ப்பயிற்சி சிறிதும் இல்லாத அவர்களுடைய அசுத்தமாகிய தமிழ்மொழித்தொடர்கள், இலக்கணவிறுவிடை கற்குஞ் சிறுவருக்கும் பெரிதும் அருவருப்பை விளைவிப்பன; சம்ஸ்கிருத நயமே கருதி இடர்ப்பட்டுப் பயிலினும் எளிதின் விளங்கிக்கொள்ளக் கூடாதன. அன்றியும் ஆவசியகமாகிய சந்தி முதலிய சிலபாகங்கள் அச்சாஸ்திரிகளாலும் உபேட்சித்து விடப்பட்டன.

இங்ஙனமாக, நமது யாழ்ப்பாணத்து நீர்வேலியிலே இற்றைக்கு ௨0. வருஷங்களின்முன் இருந்தவரும், சம்ஸ்கிருதத்திலுந் தமிழிலும் மகாபாண்டித்தியம் உடையவரும், சிவபூசா துரந்தரரும், சித்தாந்த சைவப்பிரசாரக சிரோரத்தினமும், பற்பலநூல்களை உரைகளைச் செய்தவருமாகிய நம்முபாத்தியாயர் சிவ—சங்கர பண்டிதரவர்கள், மேலே சுட்டிய குறைவுபாட்டைக் கண்டு, காருண்ணியங்கொண்டு, சம்ஸ்கிருத வியுற்பத்தி சிறிதேனும் உடையவர்களும், அன்றித் தமிழின் வியுற்பத்தி உடையவர்களாய்ச் சம்ஸ்கிருதம் வாசிக்கும் பயிற்சி மாத்திரம் உடையவர்களும் உபாத்தியாயர் உதவி வேண்டாது கற்றுக்கொள்ளுதற்கும், சிறுவர்கள் உபாத்தியாயர் உதவிகொண்டு கற்றுக்கொள்ளுதற்கும் உபயோகமாகும் பொருட்டு, வியாகரணங்களின் ஆவசியகமாகிய பாகங்களையெல்லாஞ் சுருக்கி, சுத்தமாகிய செந்தமிழால் இனிதுவிளக்கி, ஒருங்கு திரட்டி, சத்த சங்கிரகம் என்னும் பெயரிய இந்நூலாக்கினார்கள். சிறுவர்கள் காலிப

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடங் கற்குமுன்பே கற்கத்தகுந்ததும், இந்நூற்கு வழிநூலாவதும், இந்நூலின் மிகச்சுருங்கியதும் ஆகிய முதலாஞ் சத்த சங்கிரகமும் ஒன்று ஷை பண்டிதரவர்களாற் செய்யப்பட்டுள்ளது; அது இன்னும் அச்சிடப்பட்டிலது. ஆயினும், பெரும்பாலும் பண்டிதரவர்கள் பாடசாலையிற்றானே கல்வி பயின்றவர்களாகிய பிராமணர் சைவர் கையிற் பலவிடங்களிலும் ஏட்டுப் பிரதிவடிவாய்ப் பரந்துள்ளது.

இப்பொழுது ஷை பண்டிதரவர்கள் புத்திரராகிய சிவப்பிரகாச பண்டிதரவர்கள், சில புண்ணியவான்களுடைய பொருளுதவியைக்கொண்டு, இந்த இரண்டாஞ் சத்த சங்கிரகத்தை அணிப்படுத்தி அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்துப் பேருபகாரம் யாவராலும் மெச்சத்தக்கது.

இவருக்கும் இதற்கு உபகரித்த புண்ணியவான்களுக்கும் ஆயுர் ஆரோக்கிய ஐசுவரியங்கள் அபிவிருத்தியாதற்பொருட்டும், மற்றை க-ஞ் சத்த சங்கிரகமும், அவர்கள் செய்ததுந் திருத்தியும் வைத்த பிறநூல்களும் விரைவில் அச்சிடப்படும் பொருட்டும் திருவருள் பாலிக்கும்படி நகுலேச பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

கா. சபாபதிக்குருக்கள்.
கீரிமலைச்சிவன்கோயில்.

௴ இதனை அச்சிடுதற்குப் பொருள் உபகரிக்கும்படி நான் அனுப்பிய விஞ்ஞாபன பத்திரம் பெற்ற சில பிரபுக்கள், இது சம்ஸ்கிருதமாதலால் நமக்கு உபயோகமாகாதே என்று மறுத்தார்களாம்: அவர்கள் தம்முபயோகங் குறித்துக் கொடுப்பது தானம் எனப்படாது. குறியெதிர்ப்பையாதலையும், தானங்களுட் சிறந்த வித்தியா தானத்துள்ளும், சைவ சமயிகளாகிய தமக்கு இருமையின்பத்தையுந் தருதற்குச் சிறந்த துணைவராகிய பிராமண சைவகுருப்பிள்ளைகளுக்கு இன்றியமையாச்சிறப்பிற்றாகிய சம்ஸ்கிருத வித்தையின்வளர்ச்சிக்கு உபயோகமாகிய தானம்மிகுந்த விசேடமுடைத்தாதலையும் அறிந்துகொள்ளக்கடவர். ச. சிவ.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯𑌨𑌮𑌃

𑌶𑌬𑍍𑌦𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌃- இலக்கணச்சுருக்கம்

𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑌂

𑌶𑌿𑌵𑌂 𑌗𑍌𑌰𑍀𑌂 𑌗𑌣𑌾𑌧𑍀𑌶 [illegible];
𑌬𑌾𑌲𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌶𑌬𑍍𑌦𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌃.

𑌯𑍇𑌨𑌾𑌕𑍍𑌷𑌰𑌸𑌮𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌮𑌧𑌿𑌗𑌮𑍍𑌯 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍;
𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌪𑌾𑌣𑌿𑌨𑌯𑍇 𑌨𑌮𑌃.

𑌸𑌂𑌜𑍍𑌞𑌾- குறியீடு

௧- 𑌅 𑌇 𑌉𑌣𑍍 - 𑌋𑌌𑌕𑍍 - 𑌏 𑌓𑌙𑍍 - 𑌐 𑌔𑌚𑍍 - 𑌹 𑌯𑌵𑌰𑌟𑍍 - 𑌲𑌣𑍍 - 𑌞𑌮𑌙𑌣𑌨𑌮𑍍 - 𑌝𑌭𑌞𑍍 - 𑌘𑌢𑌧𑌷𑍍 - 𑌜𑌬𑌗𑌡𑌦𑌶𑍍 - 𑌖𑌫𑌛𑌠𑌥𑌚𑌟𑌤𑌵𑍍 - 𑌕𑌪𑌯𑍍 - 𑌶𑌷𑌸𑌰𑍍 - 𑌹𑌲𑍍 𑌇𑌤𑌿 𑌮𑌾𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌿 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌿.

இவைபதினான்கும் மகேசுவரனாற் செய்யப்பட்ட பிரத்தியாகார சூத்திரங்களாம். (பிரத்தியாகாரம்- சுருக்கல்.)

௨- [illegible] 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌉𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑍋 𑌵𑌰𑍍𑌣𑌃 𑌇𑌤𑍍𑌸𑌂𑌜𑍍𑌞𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 : 𑌯𑌥𑌾 𑌏𑌷𑌾𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌃 𑌣 𑌕 𑌙 𑌚 𑌟 𑌣 𑌮 𑌞 𑌷 𑌶 𑌵 𑌯 𑌰𑌲𑌾𑌃 𑌇𑌤𑌃 𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑌾𑌃; 𑌹𑌕𑌾𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌅𑌕𑌾𑌰 𑌉𑌚𑍍𑌚𑌾𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌃.

தன்பொருட்டன்றி, யாதானுமொரு காரியத்தின்பொருட்டு உச்சரிக்கப்படுகிற எழுத்து, இத்து என்னுங்குறியுடையதாம் : எங்ஙனமெனில், இச்சூத்திரங்களின் ஈற்றிலுள்ள ண் க் ங் ச் ட் ண் ம் ஞ் ஷ் ஶ் வ் ய் ர் ல் என்னும் இத்துக்கள் குறியீட்டுப்பயனுடையன; ஹ் முதலிய மெய்களிற்சேர்க்கப்பட்ட அ என்பது எளிதினுச்சரித்தற்பயனுடையது.

௩- 𑌆𑌦𑌿𑌰𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌨 𑌸𑌹𑌿𑌤𑍋 𑌮𑌧𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 : 𑌯𑌥𑌾 𑌅𑌣𑍍 𑌇𑌤𑌿 𑌅 𑌇 𑌉 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾; 𑌏𑌵𑌂 𑌅𑌕𑍍 𑌅𑌚𑍍 𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑌃 : 𑌏𑌤𑌂 𑌸𑍂𑌤𑌾𑌃 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌾𑌰 𑌶𑌬𑍍𑌦𑌵𑍍𑌯𑌵𑌹𑍍𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑍇.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதலிலுள்ள எழுத்து ஈற்றிலுள்ள இத்தோடுகூடியதாகி நடுவிலுள்ள எழுத்துக்களுக்குந் தனக்குங் குறியாம். எங்ஙனமெனில் அண் என்பது அ இ உ என்னுமெழுத்துக்களுக்குக் குறியாம்; இப்படியே அச அல் முதலிய குறிகளுமறியப்படுவன. இப்படிச்செய்யப்பட்ட குறிகள் பிரத்தியாகாரமென்னுஞ் சொல்லால் வழங்கப்படுகின்றன.

௪- அச: ஸ்வரா:. அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ லு லூ ஏ ஐ ஓ ஔ இதி சதுர்தச வர்ணாஸ்ஸ்வரா:.

இப்பதினான்கெழுத்தும் உயிர்களாம்.

௫- ஹலோ வ்யஞ்ஜனானி க் க் க் க் ங் ச் ச் ஜ் ஜ் ஞ் ட் ட் ட் ட் ண் த் த் த் த் ந் ப் ப் ப் ப் ம் ய் ர் ல் வ் ஶ் ஷ் ஸ் ஹ் இதி த்ரயஸ்த்ரிம்ஶத் வர்ணா வ்யஞ்ஜனானி.

இம்முப்பத்துமூன்றெழுத்துக்களும் மெய்களாம்

மெய்களின் மேலே யிடப்பட்ட "்" இந்த அடையாளம் விராம: எனப்படும்.

௬- அ இ உ ரு லு இதி பஞ்ச ஹ்ரஸ்வா:.

இவ்வைந்துங் குறில்களாம்.

௭- ஆ ஈ ஊ ரூ லூ ஏ ஐ ஓ ஔ இதி நவ தீர்கா:

இவ்வொன்பதும் நெடில்களாம்

௮- ஆ௩. ஈ௩. ஊ௩. ரூ௩. லூ௩. ஏ௩. ஐ௩. ஓ௩. ஔ௩. இதி நவ ப்லுதா:. இவ்வொன்பதும் அளபெடைகளாம்.*

௯. ஏச: ஸந்த்யக்ஷராணி. ஏ ஐ ஓ ஔ என்னும் நான்கும் பலவெழுத்துக்கூடியொன்றுபட்டமையாற் சந்தியெழுத்துக்களெனப்படும்.

௰- காதயோ மாவஸானா: ஸ்பர்ஶா:. க முதல் ம ஈறாகிய வெழுத்துக்கள் இருபத்தைந்தும் பரிசங்களெனப்படும்.

௧௧- ங ஞ ண ந ம அனுநாஸிகா:. ங ஞ ண ந ம என்னுமைந்தும் மெலிகளாம்.

௧௨- யரலவா அந்த:ஸ்தா:

ய ர ல வ என்னும் நான்கும் இடைகளாம்.

௧௩- ஶஷஸஹா ஊஷ்மாண:

---

*ஏ ஐ ஓ ஔ என்பவைகளுக்குக்குறில்கள் இல்லை. லு என்பதற்கு நெடிலில்லையென்பர் சிலர்.

ஶ ஷ ஸ ஹ என்னும் நான்கும் ஊஷ்மங்களாம்.

கச- அம் இத்யச: பரோ பி³ந்து³ரநுஸ்வார:. அம் என்பது போல உயிரின் பின்னதாகிய மகார விகாரமாகிய புள்ளி அனுஸ்வாரம் எனப்படும்.

கரு அ: இத்யச: பரௌ த்³வி பி³ந்தூ³ விஸர்க³: அ: என்பது போல உயிரின் பின்னதாகிய ஹகார விகாரமாகிய இருபுள்ளி விசர்க்கமெனப்படும்.

(விஸர்க³: எனினும் விஸர்ஜநீய: எனினும் பொருந்தும்)

கசு- ᳵக ᳵப இதி கபாப்⁴யாம் ப்ராக³ர்த⁴விஸர்க³ஸத்³ருʼஶௌ ஜிஹ்வாமூலீயோபத்⁴மாநீயௌ. ᳵக, ᳵப என்பன போல கவ பவம் என்பவற்றின் முன்னே நின்ற பாதிவிசர்க்கம் போன்ற எழுத்துக்கள், முறையே ஜிஹ்வாமூலீயம் உபத்மானீயம் என்னும் பெயர்பெறும்.

கஎ- வர்கே³ஷ்வாத்³யாநாம் சதுர்ணாம் பஞ்சமே பரே மத்⁴யே யமோ நாம பூர்வஸத்³ருʼஶோ வர்ண: ப்ராதிஶாக்²யே ப்ரஸித்³த⁴:. ஐந்து வருக்கங்களுள், முதலில் நின்ற நான்கு எழுத்துக்களுக்கு ஐந்தாமெழுத்துப் பின்னதாகியபோது, நடுவிலே யடைந்த முன்னதனோடொத்த எழுத்தானது, யமம் எனப்படும். உதாரணம்

பலிக்க்னீ—	கரைத்தகிழவி	க்
சக்²க்²னது:—	தின்றனர்கள்	க்²
அக்³க்³னி:—	நெருப்பு	க்³
க்⁴க்⁴னந்தி—	கொல்லுகிறார்கள்	க்⁴

இங்கே முன்னறிய க் க்² க்³ க்⁴ என்பவற்றின் பின்னே, அவற்றோடொத்து நின்ற க் க்² க்³ க்⁴ என்பனவே, யமங்களெனப்படும்.

கஅ- ஹ்ரஸ்வஸ்ய ஏகமாத்ரா, தீ³ர்க⁴ஸ்ய த்³விமாத்ரா, ப்லுதஸ்ய த்ரிமாத்ரா, வ்யஞ்ஜநஸ்ய அர்த⁴மாத்ரா உச்சாரணகால:.

குறிலுக்கு ஒருமாத்திரையும், நெடிலுக்கு இரண்டுமாத்திரையும், அளபெடைக்கு மூன்றுமாத்திரையும், மெய்க்கு அரைமாத்திரையும் உச்சாரண காலங்களாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

௧௯- ஹலோ(அ)நந்தரா: ஸம்யோக:. உயிர்களால் இடையிடப்படாத மெய்கள் சம்யோகம் எனப்படும்.

௨௦- துல்யாஸ்யப்ரயத்நம் ஸவர்ணம். ஒத்த இடமும் முயற்சியுமுடையது ஓரினமெனப்படும்.

௨௧- தத்ர ஸ்தாநாந்யஷ்டௌ; உர:, கண்ட:, மூர்தா, ஜிஹ்வாமூலம், தந்தா:, நாஸிகா, ஓஷ்டௌ, தாலு சேதி. ஆண்டுப் பிறப்பிடங்களாவன; மார்பு, மிடறு, தலை, நாவினடி, பற்கள், மூக்கு, உதடுகள், மேல்வாய் என்னுமெட்டுமாம்.

௨௨- அகுஹவிஸர்ஜநீயாநாம் கண்ட:. அ க க க க ங ஹ : என்பவற்றிற்கு மிடறு பிறப்பிடம்.

௨௩- இசுயஶாநாம் தாலு. இ ச ச ஜ ஜ ஞ ய ஶ என்பவற்றிற்கு மேல்வாய்.

௨௪- ருடுரஷாணாம் மூர்தா. ரு ரூ ட ட ட ட ண ர ஷ என்பவற்றிற்குத் தலை.

௨௫- ல்ருதுலஸாநாம் தந்தா:. ல்ரு ல்ரூ த த த த ந ல ஸ என்பவற்றிற்குப் பற்கள்.

௨௬- உபூபத்மாநீயாநாம் ஓஷ்டௌ. உ ஊ ப ப ப ப ம உபத்மாநீயம் என்பவற்றிற்கு உதடுகள்.

௨௭- ஞமஙணநாநாம் நாஸிகா ச. ஞ ம ங ண ந என்பவற்றிற்கு முன்கூறப்பட்டவற்றோடு மூக்கும் பிறப்பிடம்.

௨௮- ஏதைதோ: கண்டதாலு. ஏ ஐ என்பவற்றிற்கு மிடறும் மேல்வாயும்.

௨௯- ஓதௌதோ: கண்டோஷ்டம். ஓ ஔ என்பவற்றிற்கு மிடறு முதடும்.

௩௦- வகாரஸ்ய தந்தோஷ்டம். வ என்பதற்குப் பல்லுமுதடும்.

௩௧- ஜிஹ்வாமூலீயஸ்ய ஜிஹ்வாமூலம். ஜிஹ்வாமூலீயத்திற்கு நாவினடி.

௩௨- நாஸிகா(அ)நுஸ்வாரஸ்ய. அநுச்சுவாரத்துக்கு மூக்கு.

௩௩- ப்ரயத்நோ த்விதா, ஆப்யந்தரோ பாஹ்யஶ்ச. முயற்சியானது உண்முயற்சியும் புறமுயற்சியுமென இரண்டு விதமாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

௧௪. ஆப்யந்தர ப்ரயத்நஶ்சதுர்தா; ஸ்ப்ருஷ்ட, ஈஷத்ஸ்ப்ருஷ்ட, விவ்ருத, ஸம்வ்ருத பேதாத். உண்முயற்சியானது தீண்டல், சற்றேதீண்டல், விரித்தல், சுருக்கல் என நான்குவகை யாகும்.

௧௫- தத்ர, ஸ்ப்ருஷ்டம் ப்ரயதநம் ஸ்பர்ஶாநாம்; ஈஷத்ஸ்ப்ருஷ்டம் அந்தஸ்ஸ்தாநாம்; விவ்ருதம் ஊஷ்மணாம் ஸ்வராணாம் ச; ஸம்வ்ருதம் ஹ்ரஸ்வாநாம். அவற்றுள், பரிசங்களுக்குத் தீண்டலும், அந்தஸ்தங்களுக்குச் சற்றே தீண்டலும், உஷ்மங்களுக்கும் உயிர்களுக்கும் விரித்தலும், அவற்றுள்ளும் குறில்களுக்குச் சுருக்கலும் முயற்சிகளாம்.

௧௬- பாஹ்ய ப்ரயத்நஸ்த்வேகாதஶதா; விவார:, ஸம்வார:, ஶ்வாஸ:, நாத:, கோஷ:, அகோஷ:, அல்பப்ராண:, மஹாப்ராண:, உதாத்த:, அநுதாத்த:, ஸ்வரிதஶ்சேதி. புற முயற்சியானது விரித்தல், ஒடுக்கல், உயிர்த்தல், இசைத்தல் முழங்கல், முழங்காமை, சிறுமூச்சு, பெருமூச்சு, எடுத்தல், படுத்தல், நலிதல் எனப் பதினொரு வகையாம்.

௧௭- கப: சயா: யமா: ஶஷஸா விஸர்ஜநீயஜிஹ்வாமூலீயோபத்மாநீயா யமௌ சேத்யேஷாம் விவார: ஶ்வாஸோ அகோஷஶ்ச; அந்யேஷாம் து ஸம்வாரோ நாதோ கோஷஶ்ச. க க ச ச ட ட த த ப ப என்பவையும், இவற்றின் யமங்களும், ஶ ஷ ஸ என்பவையும், ः ᳵக ᳵப என்பவையும் ஆகிய இவற்றுக்கு; விவாரம் சுவாசம் அகோஷம் என்பவை புற முயற்சிகளாம்; மற்றையவைகளுக்குச் சம்வாரம் நாதம் கோஷம் என்பவை புற முயற்சிகளாம்.

௧௮- வர்காணாம் ப்ரதம த்ருதீய பஞ்சமா யணஶ்ச அல்பப்ராணா:; அந்யே மஹாப்ராணா:. கவர்க்கம்முதலிய ஐந்து வருக்கங்களின் முதலாம் மூன்றாமைந்தா மெழுத்துக்களாகிய க ஗ ங ச ஜ ஞ ட ட ண த த ந ப ப ம என்பனவும், அவற்றின் யமங்களும், ய ர ல வ என்பனவும் அற்பப்பிராணங்களாம்; மற்றையன மகாப்பிராணங்களாம்.

௧௯- ரு லு வர்ணயோர் மித: ஸாவர்ண்யம். ரு லு என்னு மெழுத்துக்கள் ஒன்றோடொன்று இனமாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸூத்ரஸங்க்ரஹ:

௰. ஏதைதௌ, ஓதௌதௌ, அஜ்ஹலௌ ஹலந்தஸ்தா, ஊஷ்மணாம்ச ந மித: ஸாவர்ண்யம். ஏ ஐ என்பவற்றுக்கும், ஓ ஔ என்பவற்றுக்கும், உயிரெழுத்துக்களுக்கும், மெய்யெழுத்துக்களுக்கும், அந்தஸ்தங்களுக்கும், ஊஷ்மங்களுக்கும் ஒன்றோடொன்று இனமாந் தன்மை இல்லையாம்.

௧௧. இக: ஸ்தானே அர் அல் ஏதோ ஏதே குண ஸம்ஜ்ஞா: ஸ்யு:. அ இ ஈ என்பவற்றினிடத்தில் ஏ என்பதும், உ ஊ ஓ என்பவற்றினிடத்தில் ஓ என்பதும், ரு ரூ என்பவற்றினிடத்தில் அர் என்பதும், லு லூ என்பவற்றினிடத்தில் அல் என்பதும் ஆதேசமாகி வரும்போது குணமென்னும் பெயருடையனவாம்.

௧௨. ஆச: ஸ்தானே, ஆர் ஆல் ஐச் ஏதே வ்ருத்திஸம்ஜ்ஞா: ஸ்யு:. அஆ என்பவற்றினிடத்தில் ஆ என்பதும், அ இ ஈ ஏ ஐ என்பவற்றினிடத்தில் ஐ என்பதும், உ ஊ ஓ ஔ என்பவற்றினிடத்தில் ஔ என்பதும், ரு ரூ என்பவற்றினிடத்தில் ஆர் என்பதும் லு லூ என்பவற்றினிடத்தில் ஆல் என்பதும் ஆதேசமாகிவரும்போது விருத்தியென்னும் பெயருடையனவாம்.

௧௩. ப்ர, பரா, அப, ஸம், நி, அவ, அநு, நிர், துர், வி, ஆங், நி, அதி, அபி, அதி, ஸு, உத், அபி, ப்ரதி, பரி, உப ஏதே விம்ஶதி:, க்ரியாயோகே உபஸர்கஸம்ஜ்ஞா:, கதிஸம்ஜ்ஞாஶ்ச ஸ்யு:. இவ் விருபதிடைச் சொற்களும், வினையோடு புணரும் போது உபசர்க்கங்களென்னும் பெயருடையனவும், கதியென்னும் பெயருடையனவுமாம்.

—

இதிஸம்ஜ்ஞா.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸம்ஹிதாப்ரகரணம்

௧ வர்ணாநாம் அதிஶயித: ஸந்நிதி: ஸம்ஹிதா. எழுத்துக்களி றுடைய மிகுந்த அண்மைப்பாடு புணர்ச்சியாம்.

(ஸம்ஹிதா எனினும் ஸம்ஹிதா எனினும் பொருந்தும்.)

௨- ஸம்ஹிதா த்ரிவித:; அச் ஸம்ஹிதா, ஹல் ஸம்ஹிதா, விஸர்க்க ஸம்ஹிதா இதி. புணர்ச்சியானது,உயிர்ப்புணர்ச்சி, மெய்ப்புணர்ச்சி, விசர்க்கப் புணர்ச்சி என்னும் மூன்று வகைகளை யுடையது.

அச் ஸம்ஹிதா. உயிர்ச்சந்தி.

௩- அக: ஸவர்ணே அசி பரே, பூர்வபரயோ: தீர்க்க ஏகாதேஶ: ஸ்யாத். அக் என்னு மெழுத்துக்கு இனவுயிர் பி ன்வரின், முன்னதற்கும் பின்னதற்கும் நெட்டெழுத்து ஒரே பதிலாகும். அதாவது :—அ ஆ என்பவற்றுளொன்றன் பின் அ ஆ என்பவற்றுளொன் று வரின் ஆ என்பதும், இ ஈ என்பவற்றுளொன்றன் பின் இ ஈ என்பவற்றுளொன்று வரின் ஈ என்பதும், உ ஊ என்பவற்றுளொன்ற ன் பின் உ ஊ என்பவற்றுளொன்று வரின் ஊ என்பதும், ரு ரூ என் பவற்றுளொன்றன் பின் ரு ரூ என்பவற்றுளொன்று வரின் ரூ என்பதும் லு லூ என்பவற்றுளொன்றன் பின் லு லூ என்பவற்றுளொன்று வரின் லூ என்பதும், முன்னே நின்ற எழுத்துக்கும் பின்னே வந்த எழுத்துக்கு ம் ஒரே ஆதேசமாகும்.

உதாகரணம்.

(அ) (அ) (ஆ)
ஶிவ + அர்த்த: = ஶிவார்த்த: — சிவனது பொருள்.
காம + அரி: = காமாரி: — மன்மதனுடைய பகைவன்.

(அ) (ஆ) (ஆ)
ஶிவ + ஆயுத⁴: = ஶிவாயுத⁴: — சிவனுடைய சாத்திரம்
பஞ்ச + ஆநந: = பஞ்சாநந: — ஐம் முகன்.

(ஆ)
உமா + அத்ர = உமாத்ர — உமை இங்கே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அ ஸவர்ணஸந்தி ஸூத்ரம்

உமா + ஆஸ்தே = உமாஸ்தே — உமை இருக்கிறாள்.

(இ)

கிரி + இந்த்ர: = கிரீந்த்ர: — மலைத் தலைவன்.

கிரி + ஈஶ: = கிரீஶ: — மலைத் தலைவன்.

(ஈ)

வாணீ + இஹ = வாணீஹ — சரஸ்வதி இங்கே.

கௌரீ + ஈஶ: = கௌரீஶ: — உமைக்குத் தலைவன்.

(உ)

குரு + உபதேஶ: = குரூபதேஶ: — குருவின் உபதேசம்.

தரு + ஊர்த்வம் = தரூர்த்வம் — மரத்தின் மேல்.

(ஊ)

தநூ + உசித: = தநூசித: — சரீரத்துக்கு ஏற்றது.

வதூ + ஊரு: = வதூரு: — பெண்ணுடைய தொடை.

(ரு)

பித்ரு + ருத்தி: = பித்ரூத்தி: — பிதாவின் செல்வம்.

ஹோத்ரு + ருகார: = ஹோத்ரூகார: — வேட்போனுடைய ருகாரம்.

(லு)

ஶகலு + லுகார: = ஶகலூகார: — சகிலு என்பது லுகாரவீறுடையது.

௪— ஆத்குண:, ஏக: பூர்வபரயோ: குண ஏகாதேஶ: ஸ்யாத். அ ஆ என்பவற்றிலிருந்து இக் என்பது பின்னதாயின், முன்னதற்கும் பின்னதற்கும் குணவெழுத்து ஒரே ஆதேசமாகும்.

அதாவது:— அ ஆ என்பவற்றுளொன்றன்பின், இ ஈ என்பவை வரின் ஏ என்பதும், உ ஊ என்பவை வரின் ஓ என்பதும், ரு ரூ என்பவை வரின் அர் என்பதும், லு லூ என்பவை வரின் அல் என்பதும் நின்ற எழுத்துக்கும் வந்த எழுத்துக்கும் ஒரே ஆதேசமாகும்.

உ—ம்

தவ + இதம் = தவேதம் — உன்னுடைய இது.

பர + ஈஶ: = பரேஶ: — மேலான தலைவன்.

கா + இயம் = கேயம் — எவள் இவள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

[illegible] + ஈசஸ: = ஐஶஸ:—பெரியதலைவன்
[illegible] + உக்தம் = கெரொக்தம்— எவனுற் சொல்லப்பட்டது
தவ + ஊர்த்வம் = தவோர்த்வம்—அதற்குமேல்
[illegible] + உதகம் = கங்கோதகம்—கங்கையின் நீர்
[illegible]வா + ஊர்த்வம் = ஶாகோர்த்வம்—கொம்பின் மேல்
தவ + ருத்தி: = தவர்த்தி:—உனது செல்வம்
[illegible] + ருஷி: = மஹர்ஷி:—பெரிய முனிவன்
தவ + ஌கார: = தவல்கார:—உன்னுடைய ஌காரம்

[illegible] அவர்ணாதேசி வசெ, பஞ்சமீ யாமொவ்ருத்திரெ [illegible] வ்ருத்திரேகாதேஶ: ஸ்யாத். அ ஆ என்பவற்றிலிருந்து ஏச் என்பது பின் [illegible]ரின், முன்னதற்கும் பின்னதற்கும் விருத்தியெழுத்து ஒரே ஆதேசமா [illegible]

அதாவது:—அ ஆ என்பவற்றுளொன்றன்பின், ஏ ஐ என்பவை [illegible] ஐ என்பதும், ஓ ஔ என்பவை வரின் ஔ என்பதும், நின்ற [illegible]ழுத்துக்கும் வந்த எழுத்துக்கும் ஒரே ஆதேசமாகும்.

உ—ம்

[illegible]வ + ஏகத்வம் = ஶிவைகத்வம்—சிவனோடு ஒற்றுமை
[illegible] + ஐஶ்வர்யம் = பரைஶ்வர்யம்—மிகுந்த தலைமை.
[illegible] + ஏஷா = ஸைஷா—அவள் இவள்.
[illegible] + ஐந்த்ரீ = ஸைந்த்ரீ—அது கிழக்கு.
[illegible]த + ஓதந: = க்ருதௌதந:—நெய்ச் சோறு
[illegible]வ்ய + ஔஷதம் = திவ்யௌஷதம்—திவ்வியமருந்து.
[illegible]மா + ஓக: = கங்கௌக:—கங்கையின் பெருக்கு.
[illegible]வா + ஔந்நத்யம் = ஶாகௌந்நத்யம்—கொம்பின் உயர்ச்சி.

கூ— அவர்ணாதுபஸர்காத் ருகாராதௌ தாதௌ [illegible] பஞ்சமீ பரயொ வ்ருத்திரேகாதேஶ: ஸ்யாத். அ ஆ என்பவற்றை இறுதியிலுடைய உபசர்க்கத்திலிருந்து, ரு காரத்தை முதலி[illegible]டைய தாதுப் பின்னதாகிவரின், முன்னதற்கும் பின்னதற்கும் விருத்தி[illegible]யெழுத்து ஒரேபதிலாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ—ம்

உப + ருச்சதி = உபார்ச்சதி—புறம் போகிறான்.

ப்ர + ருஜ்யதே = ப்ரார்ஜ்யதே—மிகத் தேடப்படுகின்றது

௭- அவர்ணாந்தாத் உபஸர்காத் ஏகாராதௌ ஓகாராதௌ தாதௌ பரே, பரரூபமேகாதேஶ: ஸ்யாத். அ ஆ என்பவற்றை இறுதியிலுடைய உபசர்க்கத்திலிருந்து, ஏ ஓ என்பவற்றை முதலிலுடைய தாதுப் பின்னதாகி வரின், முன்னதற்கும் பின்னதற்கும் பின்வடிவம் ஒரே பதிலாகும்.

உ—ம்

ப்ர + ஏஜதி = ப்ரேஜதி—மிக நடுங்குகிறான்.

உப + ஏடதி = உபேடதி—கிட்டப் போகிறான்.

ப்ர + ஓஷதி = ப்ரோஷதி—மிகச் சுடுகின்றது.

வ்யவ + ஓஹதி = வ்யவோஹதி—மிக நீக்குகிறான்

பரா + ஓவதி = பரோவதி—பின் போகிறான்.

௮- அவர்ணாத் ஓமாங்கோ: பரயோ: பரரூபமேகாதேஶ: ஸ்யாத். அ ஆ என்பவற்றிலிருந்து ஓம் ஆங் என்பவைபின்னவையாகிவரின், முன்னதற்கும் பின்னதற்கும் பின்வடிவம் ஒரேபதிலாகும்

உ—ம

ஶிவாய + ஓம் நம: = ஶிவாயோம் நம:—சிவனுக்கு ஓம் வணக்கம்

ஶிவ + ஆ இஹி = ஶிவேஹி—சிவனே வா.

௯- அவர்ணாத் ஏவே பரே பரரூபமேகாதேஶ: ஸ்யாத் அநியோகே. அ ஆ என்பதிலிருந்து ஏவ என்பது பின்னதாகிவரின்பின்வடிவம் ஒரேபதிலாகும்; துணிதற்பொருளில்லாதவிடத்து.

உ—ம்

க்வ + ஏவ போக்ஷ்யஸே = க்வேவ போக்ஷ்யஸே—எங்கேதான் புசிப்பாய்.
துணிதற்பொருளுள்ள இடத்தாயின,

அத்ய + ஏவ கச்ச = அத்யைவ கச்ச—இன்றுதான் போய்விடு.
எனவரும்.

௧௦- அவர்ணாத் ஓத்வோஷ்டயோ: பரயோ: பரரூபம் வா ஸமாஸே. அ ஆ என்பவற்றிலிருந்து ஓது ஓஷ்டு என்னுஞ் சொ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ந்தன் பின்னவையாகிவரின் விகற்பமாகப் பின்வடிவம் ஒரேபதிலாகும்; சமாச முண்டாயின்.

உ—ம்

ஸ்தூல + ஓது: = ஸ்தூலோது: / ஸ்தூலௌது: } பரிய பூனை.

பிம்ப + ஓஷ்ட: = பிம்போஷ்ட: / பிம்பௌஷ்ட: } கொவ்வைக்கனிபோன்ற உதடு.

சமாசம் இல்லாத இடத்தாயின்,

தவ + ஓஷ்ட: = தவௌஷ்ட:—உனது உதடு.

எனவரும்.

௧௧- ஶகந்த்வாதய:.

இனி வழுவமைதிகள் எழுதப்படுகின்றன :—

ஸீம + அந்த: = ஸீமந்த:—மயிர்வகிர்தல்.

பத + அஞ்ஜலி: = பதஞ்ஜலி:—பதஞ்சலி.

ஸார + அங்க: = ஸாரங்க:—மான்.

ஹல + ஈஷா = ஹலீஷா—மேழி.

லாங்கல + ஈஷா = லாங்கலீஷா—மேழி.

மனஸ் + ஈஷா = மனீஷா—புத்தி.

ஸ்வ + ஈரம் = ஸ்வைரம்—தன்னிச்சை.

அக்ஷ + ஊஹிநீ = அக்ஷௌஹிணீ—ஓர்சேனைத்தொகை.

ருண + ருணம் = ருணார்ணம்—கடனின்மேற்கடன்.

௧௨- இக: ஸ்தாநே யணாதேஶ: ஸ்யாதசி பரே. இக் என்பதற்கு யண் என்னும் பதிலாகும்; உயிர்வரின்.

அதாவது :—உயிர் பின்னதாகி வருமாயின், நிலைமொழி யீற்றில் நின்ற இ ஈ என்பவற்றுக்கு ய் என்பதும், உ ஊ என்பவற்றுக்கு வ் என்பதும், ரு ரூ என்பவற்றுக்கு ர் என்பதும், லு லூ என்பவற்றுக்கு ல் என்பதும் ஆதேசமாகும்.

உ—ம்

த்ரி + அம்பக: = த்ர்யம்பக:—மூன்றுகண்ணுடையவன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

௩௨ யண்ஸந்தி:

இதி + ஆகமா: = இத்யாகமா: — எத்தனை ஆகமங்கள்.
யதி + உத்திஷ்டஸி = யத்யுத்திஷ்டஸி — எழுகின்றாயானால்
அதி + ஊர்ஜித: = அத்யூர்ஜித: — மிக்க உயர்ந்தவரை.
இதி + ருஷய: = இத்ய்ருஷய: — எத்தனை முனிவர்.
இதி + லுகாரா: = இத்ய்லுகாரா: — இப்படியே லுகாரங்கள்.
இதி + ஏகவர்ணா: = இத்யேகவர்ணா: — இப்படியே ஏ எழுத்துக்.
இதி + ஐக்யம் = இத்யைக்யம் — ஒன்றிப்படியே.
அதி + ஐஶ்வர்யம் = அத்யைஶ்வர்யம் — மிகுந்த செல்வம்
கதி + ஓஷதய: = கத்யோஷதய: — எத்தனை பூண்டுகள்.
அதி + ஔசித்யம் = அத்யௌசித்யம் — மிகுந்த தகுதி.

நதீ + அத்ர = நத்யத்ர — யாறு இங்கே.
வாணீ + ஏஷா = வாண்யேஷா — சரசுவதி இவள்.
குரோ: + அர்த்த: = குர்வர்த்த: — குருவின் பொருள்.
மது + ஆஶா = மத்வாஶா — தேனாசை.
வது + ஆஶா = வத்வாஶா — பெண்ணாசை.
ஸ்வயம்பூ + ஈக்ஷணம் = ஸ்வயம்ப்வீக்ஷணம் — கடவுளின் பார்வை.
தாத்ரு + அனுகம்பா = தாத்ரனுகம்பா — பிரமனது அருள்.
ஸவித்ரு + ஓஜ: = ஸவித்ரோஜ: — சூரியனது ஒளி.
ரு + அகாரம் = ரகாரம் — ரு என்னும் எழுத்து.
லு + அகாரம் = லகாரம் — லு என்னும் எழுத்து.

௫௯. ஏச: ஸ்தானே அய் அவ் ஆய் ஆவ் ஏதே ஆதேஶா: ஸ்யு:, அசி பரே. ஏ என்பதற்கு அய் என்பதும், ஓ என்பதற்கு அவ் என்பதும், ஐ என்பதற்கு ஆய் என்பதும், ஔ என்பதற்கு ஆவ் என்பதும் ஆதேசமாகும்; உயிர் பின்னதாகிவரின்.

உ—ம்

தே + அதி = தயதி — குடிக்கிறான்,
ஜலே + உத்பன்னம் = ஜலயுத்பன்னம் — நீரிற் பிறந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஷோ -|- அதி = ஷவதி—இருக்கிறான்.
ஶிஶோ -|- உத்திஷ்ட = ஶிஶவுத்திஷ்ட—சிறுவனே எழு.
கோ -|- அதி = மாயதி—பாடுகிறான்.
ஶ்ரியை -|- உத்யுக்த: = ஶ்ரியாயுத்யுக்த:—செல்வத்துக்கு முயன்ற
தஸ்மை -|- வ = நாவெ—ஓடத்துக்கு. (வன்.
தே -|- இஹ = தாவிஹ—அவர் இங்கே.

௩௪- வஷாஜெ ஷூதாநாஂ அயவாயாவாஂ யவயோ
பதசத்தத்தின் இறுதியில் நின்ற அய் அவ் ஆய் ஆவ் என்பவ
ற்றுடைய ய் வ் என்பவற்றிற்கு விகற்பமாக லோப் என்னும் லோ
பமுண்டாம். (லோபம்- கேடு.

உ—ம்

ஜயா—ந்தநஂ—அல்லது. ஜய உந்தநஂ.
ஶிஶவுத்திஷ்ட———— ஶிஶ உத்திஷ்ட.
ஶ்ரியாயுத்யுக்த:—— ஶ்ரியா உத்யுக்த:.
தாவிஹ ———————— தா இஹ.

[இங்கே ய் வ் என்பவை லோப மடைந்த பின்பு, முன்னும் பின்னுமா
ன எழுத்துக்கள், "அவர்ணாதிகி," என்பது முதலிய விதிகளாற் புண
ராது நின்றதற்கு விதி,
"லோபவிதி மொலெ கூதெ யாவுவூ ஷூஷாஷ்யஜயோ: ஸ
ந்தி:ஸ்யாஜ. லோப் என்னும் லோபஞ்செய்யபபட்டவழி எதுகெ
—ஹோ அதற்கு முன்னும் பின்னுமுள்ள எழுத்துக்களுக்குச்சந்தி இல்லை,,
என்பதாம்]

௩௫- வஷாஜெ ஷூதா ஒஷஜ: வாஸ்ய அகாரஸ்ய லோப்
ஸ்யாத். பதசத்தத்தின் இறுதியில் நின்ற ஏ ஓ என்பவற்றின் பின்ன
தாகிய அ என்பதற்கு லோபமுண்டாம்.

உ—ம்

ஶிவ -|- அவ = ஶிவாவதெ—சிவனே காப்பாய்
குரோ -|- அவ = குரோவ—குருவே காப்பாய்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கரு- ஏதத்ஸே தஸ்ய ஸு வா ஸ்வரே பதாந்தே பதாந்தத்தின் இறுதியாகிய இடத்து, ஏதத் என்பதின் ஓகாரத்துக்கு ஸு என்னு மாதேசம் விகற்பித்துண்டாகும்; உயிர் பின்னதாயின்.

உ—ம்

ஏஷ-|- ஶம்பு: = ஶம்பவேஷ: / ஶம்பு ஏஷ: } பசுத்தலைவன்

பதாந்த மல்லாத இடத்தில்,

ஏஷ-|- ஈ = ஶைவீ—பசுவினிடத்தில்.

எனவரும்.

ஶிவேம்ஶ்ரு ஶிவாக்ஷெள நித்யம்

ஏஷ-|- ஈம்ஶ்ரு: = ஶிவேம்ஶ்ரு:—பசுத் தலைவன்.

ஏஷ-|- அக்ஷ: = ஶிவாக்ஷ:—பல் கணி.

இவை இரண்டும் நியதமாம்.

கஎ- ஏகாஜ்நிபாத, ஓதந்தநிபாத:, ப்லுதஶ்ச ஸ்வரே ஸந்திம் நாப்நோதி. ஓரே யுயிருடைய நிபாதவிடைச்சொல்லும், ஓகாரவீறுடைய நிபாதவிடைச்சொல்லும், அளபெடையுஞ் சந்தியைப்பெறா.

உ—ம்

அ அநந்த— அ அநந்தனே.

இ இந்த்ர— இ இறைவனே.

உ உமேஶ— உ சிவனே.

அஹோ ஶம்பவாந— ஓ சிவனே.

ஶிவ ௩ ஏஹி—சிவனே வா.

கஅ- பஹுவசநே ந்ருஷ்வேந்த்ரா ஈஶா:, த்விவசநே ந்ருஷ்ட ஈதூதேதந்தம் ஸ்வரே ஸந்திம் நாப்நோதி. பன்மையின் முடிந்த அமீ என்னுஞ் சொல்லும் இருமையின் முடிந்த ஈ ஊ ஏ என்பவற்றை ஈற்றிலுடைய சொற்களும் சந்தியைப்பெறா.

உ—ம்

அமீ ஈஶா:—இவர்கள் இறைவர்கள்.

அமீ உஷ்ட்ரா:—இவைகள் ஒட்டகங்கள்.

கவீ ஏதௌ—புலவர் இவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

படவ இமே — சமர்த்தர் இவர்.
மாலா ஆநய — மாலைகளைக் கொணர்.

௨௧- பதாந்தே ஸ்தித இக் ஸந்திம் வா ந ப்ராப்நோதி, ஹ்ரஸ்வஶ்ச வா பவதி; அஸவர்ணே அசி பர: நது ஸமாஸே.

மொழியீற்றிலே நின்ற இக் என்பது விகற்பமாகச் சந்தியைப்பெறுது; அதுவன்றிக் குறிலுமாம்; அசவர்ண மாகிய உயிர்வரின், சமாச மில்லாத இடத்து.

உ—ம்

கௌரீ + அத்ர = கௌர்யத்ர }
கௌரீ அத்ர } சிவன் இங்கே.
கௌரி அத்ர }

சமாச முண்டாயின்,

பஶுபதி + அர்சா = பஶுபத்யர்சா — சிவபூசை.

எனவரும்.

௨௨- ருக் ஸந்திம் வா ந ப்ராப்நோதி, ஹ்ரஸ்வஶ்ச வா பவதி; ருதி பரே ஸமாஸே அபி. மொழியீற்றிலே நின்ற ருக் என்பது விகற்பமாகச் சந்தியைப் பெறுது; அதுவன்றிக் குறிலுமாம்; ரு வரின்; சமாசம் உள்ளவழியும்.

உ—ம்

ப்ரஹ்மா + ருஷி: = ப்ரஹ்மர்ஷி: }
ப்ரஹ்மா ருஷி: } பிரம முனி.
ப்ரஹ்ம ருஷி: }

ஸப்த + ருஷய: = ஸப்தர்ஷய: }
ஸப்த ருஷய: } எழு முனிவர்.

இதி அச்ஸந்தி: ஸமாப்த:.
உயிர்ச்சந்தி முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌾𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾𑌃. பரீக்ஷைவினாக்கள்.

௧- 𑌸𑌨𑍍𑌧𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑌿𑌂?.

௨- 𑌅𑌕𑌾𑌰𑌾𑌤𑍍 𑌇𑌕𑌾𑌰𑍇 𑌪𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍?. 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑌿𑌂?. 𑌉𑌦𑌾𑌹𑌰𑌣𑌂 𑌕𑌿𑌂?.

௩- 𑌈𑌕𑌾𑌰𑌾𑌤𑍍 𑌅𑌕𑌾𑌰𑍇 𑌪𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍? 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍋𑌦𑌾𑌹𑌰𑌣𑍇 𑌕𑍇?.

௪- 𑌅𑌵𑌰𑍍𑌣𑌾𑌤𑍍 𑌇𑌕𑌿 𑌪𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍?. 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍋𑌦𑌾𑌹𑌰𑌣𑍇 𑌕𑍇?. 𑌅𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑍇𑌃 𑌅𑌪𑌵𑌾𑌦𑌃 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌵𑌾 𑌨 𑌵𑌾?. 𑌸𑌃 𑌕𑌃?.

௫- 𑌅𑌵𑌰𑍍𑌣𑌾𑌤𑍍 𑌏𑌚𑌿 𑌪𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍? 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍋𑌦𑌾𑌹𑌰𑌣𑍇 𑌕𑍇?. 𑌅𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑍇𑌃 𑌅𑌪𑌵𑌾𑌦𑌃 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌵𑌾 𑌨 𑌵𑌾?. 𑌸𑌃 𑌕𑌃?.

௬- 𑌇𑌕𑌃 𑌅𑌚𑌿 𑌪𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍?. 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍋𑌦𑌾𑌹𑌰𑌣𑍇 𑌕𑍇?. 𑌅𑌪𑌵𑌾𑌦𑌃 𑌕𑌃?.

௭- 𑌏𑌚𑌃 𑌅𑌚𑌿 𑌪𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍?. 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍋𑌦𑌾𑌹𑌰𑌣𑍇 𑌕𑍇?. 𑌅𑌪𑌵𑌾𑌦𑌃 𑌕𑌃?.

௮- 𑌏𑌙𑌃 𑌪𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍 𑌅𑌤𑌿 𑌪𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍?. 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍋𑌦𑌾𑌹𑌰𑌣𑍇 𑌕𑍇?. 𑌅𑌪𑌵𑌾𑌦𑌃 𑌕𑌃?.

பின்வரும் புணர்மொழிகளைப்பிரித்துப்பிரமாணஞ்சொல்லிக்கூட்டுக

[illegible]	𑌲𑌮𑍍𑌬𑍋𑌦𑌰𑌃	[illegible]
[illegible]	𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌃	𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍍𑌬𑌕𑌃
𑌭𑌾𑌨𑍂𑌦𑌯𑌃	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	

[illegible]. மெய்ச் சந்தி.

௨௧- 𑌝𑌯𑌾𑌂 𑌵𑌶𑌿 𑌪𑌰𑍇 [illegible] 𑌜𑌶𑌃 𑌸𑍍𑌯𑍁𑌃.
மொழியீற்றிலே நின்ற ஸய் என்பதற்கு வசி என்பது வரின் வசி [illegible]

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ந: ஙஸ் என்பதுவரின் ஜஸ் என்பதும் ஆதேசமாகும்.

உ-ம்

ச் - - வ = ச்வ.	ம் + வ = ம்வ.	ஞ் + ஹ = ஞ்ஹ
ந் - - ந = ந்ந.	ட் + ட = ட்ட.	வ் + ம = வ்ம.
ட் - - ய = ட்ய.	த் + த = த்த.	ஹ் + ஹ = ஹ்ஹ.
ண் - - வ = ண்வ.	க் + வ = க்வ.	வ் + ம = வ்ம.
ஷ் - - வ = ஷ்வ.	ல் + வ = ல்வ.	ஷ் + ஹ = ஷ்ஹ.
ஜ் - - வ = ஜ்வ.	எனவும்	ஞ் + ஜ = ஞ்ஜ.
உ - - க = க்க.	ஸ் + ஜ = ஸ்ஜ.	ர் + ப = ர்ப.
ர் - - வ = ர்வ.	ப் + ப = ப்ப.	ய் + ஷ = ய்ஷ.
ஞ் - - வ = ஞ்வ.	ய் + ஷ = ய்ஷ.	ச் + ஜ = ச்ஜ.
ச் - வ = ச்வ.	ஸ் + ம = ஸ்ம.	ட் + ப = ட்ப.
ம் - - வ = ம்வ.	ஷ் + ய = ஷ்ய.	த் + ஷ = த்ஷ.
ஸ் - - ஸ = ஸ்ஸ.	ஜ் + ஜ = ஜ்ஜ	க் + ஜ = க்ஜ.
ஹ் - - ஹ = ஹ்ஹ.	ப் + ஷ = ப்ஷ.	வ் + ஜ = வ்ஜ.
ந் - ந = ந்ந.	த் + ய = த்ய.	எனவும்வரும்
ப் - த = ப்த.	ம் + ஜ = ம்ஜ.	

௨௨. ஸகார தவர்க்கயோ: ஶகார சவர்க்காப்யாம் யோகே ஶகார சவர்க்கௌ ஸ்து:. ஸகார தவர்க்கங்களுக்கு ஶகார சவர்க்கங்களோடு கூடுதல் உண்டாகிய போது ஶகார சவர்க்கங்கள் உண்டாகும்.

அதாவது: — ஸகாரத்துக்கு ஶகார சவர்க்கங்களோடு கூடுதல் உண்டாகிய போது ஶகாரமும், தவர்க்கத்துக்கு ஶகார சவர்க்கங்களோடு கூடுதல் உண்டாகியபோது சவர்க்கமும் ஆதேசமாகும்.

உ—ம்

ராமஸ் + ஶேதே = ராமஶ்ஶேதே — இராமன் துயில்கின்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

௰௮ ஶப்தஸம்ருத்தி:

தேவஸ் -|- வதேஷ = தேவஸ்வதேஷ —தேவன் சொல்லுகிறான்.
நரஸ் -|- ஶிக்ஷயதி = நரஸ்ஶிக்ஷயதி—மனிதன் தண்டிக்கிறான்
தத் -|- ஶாஸ்த்ரம் = தச்சாஸ்த்ரம்—அந்த நூல்
தத் -|- ஸரதி = தத்ஸரதி—அது போகின்றது.
தத் -|- ஸூதி = தத்ஸூதி—அது மூடுகின்றது.
தத் -|- ஜீவதி = தஜ்ஜீவதி—அது வாழுகின்றது.
தத் -|- ஜக்ஷதி = தஜ்ஜக்ஷதி—அதைத் தின்கிறான்.
